2014 ஜூலை 25]

செய்வதும் நாடா இல்லாத தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளைப் பற்றியும் தெரியப்படுத்திய காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள் கேள்வியிலே கேட்டபடி தொழிற்பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. இருந்தாலும், இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள் அங்கே உற்பத்தியான சில பொருட்கள் வாங்கப்படாமல் இருக்கின்றன. அவை கைத்தறித் துறையின் தலைமை சொசைட்டியாக இருக்கக்கூடிய கோ-ஆப்டெக்ஸ் மூலமாகப் பெறப்படுமா என்பதைக் கேட்டுள்ளார்கள். துறை அதிகாரிகள் மூலமாக அந்தந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, எந்தப் பொருள்கள் விற்காமல் தேங்கியிருக்கின்றன என்பது பற்றியும், விற்பனைக்குரிய சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

அடிப்படை வசதிகள்

***30655—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லாரிலுள்ள அரசு பழப் பண்ணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவையிலிருந்து உதகமண்டலத்திற்குச் செல்லும் வழியில் கல்லார் அரசு பழத் தோட்டம் அமைந்துள்ளது. இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 2012-2013 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லார் பகுதியில் ஓய்வுக் கூடம், கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு ரூபாய் 25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி, வெற்றி என பெற்ற வெற்றிகள் யாவும் தமிழ்நாட்டு மக்களையே சாரும், (மேசையைத் தட்டும் ஒலி) அதை வாங்கித் தந்த பெருமை மட்டும் நம் மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்ற நிலைமையை தமிழகத்திலே உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) படிக்கட்டுகளாக இருப்பதைவிட சிற்பிகளாக இருக்க வேண்டுமென்ற விவேகானந்தரின் கூற்றுக்கேற்ப நாட்டு மக்கள் நலன் ஒன்றே குறிக்கோள் என வாழ்ந்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மலைகளின் அரசி எனப் போற்றப்படும் உலகப் புகழ் பெற்ற நீலகிரி மலையின் அடிவாரத்தில் சலசலத்து ஓடும் நீரோடையின் மடியில், வானுயர்ந்த மரங்களோடும், காண்போரைச் சொக்கவைக்கும் இயற்கை அழகோடும் விளங்கிவரும் கல்லார் பழப் பண்ணை, கடந்த காலத்தில் பெய்த பேய்மழையினால் சிதிலமடைந்தது. அதனை சீரமைப்பதற்காக கருணையுள்ளத்தோடு 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அங்கே நடைபாதையும், கூடுதல் கட்டடத்தையும் கட்டித் தந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

2014 ஜூலை 25]

முற்பகல் 10-40

சுற்றுலாத் தலமாக இருக்கின்ற ஊட்டிக்குச் செல்லும் பாதையையொட்டி அந்தப் பகுதி இருக்கின்றது. அந்தக் கல்லார் பழப் பண்ணையில் அரிய வகைப் பழங்களும், நாற்றுகளும் எளிதாகக் கிடைக்கின்ற காரணத்தினால், சுற்றுலாப் பயணிகளெல்லாம் ஊட்டி நெடுஞ்சாலையிலிருந்து பழப் பண்ணைக்குச் செல்கிற பாதையில் 1 கி.மீ. சாலை பழுதடைந்திருக்கிறது. அதோடில்லாமல், அங்கு வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் போதுமான இட வசதி மேம்பாடு செய்யப்படாமல் உள்ளது. அதற்கு மேலாக, வன விலங்குகள் அந்தப் பழப் பண்ணையிலே புகுந்து, அங்கு பேரிழப்பை ஏற்படுத்துகின்ற காரணத்தினாலே, அந்தப் பழப் பண்ணையைச் சுற்றி, சுமார் 2.5 கி.மீ. தூரத்திற்கு மின்வேலியினை அரசு அமைத்துக்கொடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை எழில் கொஞ்சும் சோலைகள் அமைந்துள்ள இந்தப் பகுதியில் ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற காரணத்தினாலே, அவர்கள் தங்குவதற்குப் போதுமான அளவிற்குத் தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

264—

அரசு விழா

*__45588—திரு. சு. குணசேகரன்:__

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாக நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்த் தூதர் தனிநாயகம் அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.*

முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறார், அவர் கருணை உள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறார்" என்று சொல்வார்கள். அந்தக் கருணையின், கடவுளாகத் திகழ்கிற*